வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 17/2022

வழக்குசாட்சி LW 4 / PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர், முதல் நிலை காவலர், புழல் சிறைச்சாலை– 1 | | |
| கணவர்/தந்தை | மேகலிங்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 33 |

தேதி 07.01.2025

எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம்செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

**நான் தற்போது புழல் சிறைச்சாலை 1ல் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.11.2021 நான் தனியறை தொகுதியில் பணியில் இருக்கும்போது புழல் காவல் நிலையத்தில் இருந்து ஆய்வாளர் வந்து செல்போன் பிடித்தது தொடர்பாக விசாரித்து என்னிடம் படம் வரைந்து கையொப்பம் வாங்கினார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**குறுக்கு விசாரணை**

**சம்பவம் நடந்தது 2020 என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று நான் பணியில் இல்லை என்றால் ஆமாம். அன்று என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்ன நடந்தது என்று தெரியாமல் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால்**

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் தேதி தவறு என்றாலும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.